பக்கங்கள்: 06

# காலைக்கதிர்

Kalaikkathir — மாலைப்பதிப்பு

சாயல் 03 வள்ளுவர் ஆண்டு 2053 சித்திரை 04 ஞாயிற்றுக்கிழமை 17.04.2022 கதிர் 57

## நாமல் தலைமையில் நாளை விசேட கூட்டம்

அலரிமாளிகையில் நாளை மாலை 5 மணிக்கு விசேட கூட்டமொன்றை நடத்துவதற்கு முன்னாள் அமைச்சர் நாமல் ராஜபக்ஷ ஏற்பாடு செய்துள்ளார்.

இந்தக் கூட்டத்துக்கு மாகாண சபைகளின் முன்னாள் உறுப்பினர்கள், உள்ளூராட்சி சபைகளின் உறுப்பினர்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

2

# காலிமுகத்திடலில் 9ஆவது நாளாகவும் மக்கள் தன்னெழுச்சி

## ஆதரவாக யாழில் இன்று மாலை தீப்பந்தப் போராட்டம்

கொழும்பு - காலிமுகத்திடலில் 'கோட்டா வீட்டுக்குப் போ' என்ற கோஷத்துடன் ஆரம்பிக்கப்பட்ட மக்கள் தன்னெழுச்சிப் போராட்டம் 9ஆவது நாளாகவும் இன்று தொடர்கின்றது.

நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி நிலைக்குப் பொறுப்பேற்று ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மற்றும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ உள்ளடங்கலாக நாடாளுமன்றத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அனைத்து ராஜபக்ஷ குடும்ப உறுப்பினர்களும் பதவி விலக வேண்டும் என வலியுறுத்தி இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

ஜனாதிபதி செயலகத்தை முற்றுகையிட்டு இடம்பெறும் இந்தப் போராட்டத்தில் பல தரப்பினரும் கலந்துகொண்டு தமது ஆதரவைத் தெரிவித்து வருகின்றனர்.

இதனால் போராட்டம் நாளுக்குநாள் வலுப்பெற்று வருகின்றது.

2



# பதவி விலகமாட்டார் மஹிந்த



## பிரதமராகத் தான் நியமிக்கப்படவுள்ளேன் என்று வெளியான தகவல் வதந்தி என்கின்றார் நாமல்

பிரதமர் பதவியில் மஹிந்த ராஜபக்ஷவே தொடர்ந்து நீடிப்பார். பிரதமர் பதவிக்கு நான் நியமிக்கப்படவுள்ளேன் என்று வெளியான தகவல் வதந்தியாகும்.

– இவ்வாறு முன்னாள் அமைச்சரும் ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினருமான நாமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.

2

# அமைச்சுப் பதவி வேண்டாம்

## – சரத் வீரசேகர அறிவிப்பு



முன்னாள் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ரியர் அட்மிரல் சரத் வீரசேகர புதிய அமைச்சரவையில் எந்தவொரு அமைச்சுப் பொறுப்பையும் ஏற்றுக்கொள்ளப் போவதில்லை என்று அறிவித்துள்ளார்.

நாட்டின்பொருளாதார நிலைமை மற்றும் அரச எதிர்ப்புப் போராட்டம் ஆகியவற்றைக் கருத்தில் கொண்டே

2

# அலி சப்றி குழுவினர் அமெரிக்கா பயணம்



அமைச்சர் அலி சப்றி உள்ளிட்ட குழுவினர் அமெரிக்கா நோக்கிப் பயணமாகியுள்ளனர்.

இந்தக் குழுவில் நிதி அமைச்சருடன் மத்திய வங்கியின் ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க மற்றும் நிதி அமைச்சின் செயலாளர் மஹிந்த சிறிவர்தன ஆகியோரும் இணைந்துள்ளனர்.

சர்வதேச நாணய நிதியத்துடனான பேச்சுக்காக நிதி

2

# காலியில் பொலிஸார் அடக்குமுறை!

## – 'கோட்டாகோகம' கூடாரங்கள் அகற்றல்



காலி நகரில் ஆர்ப்பாட்டக்காரர்களால் அமைக்கப்பட்டிருந்த தற்காலிக கூடாரங்களை பொலிஸார் இன்று அகற்றியுள்ளனர்.

கொழும்பு - காலிமுகத்திடல் போராட்டத்துக்கு ஆதரவாக காலியிலும் இன்று இரண்டாவது நாளாக மக்கள் எழுச்சிப் போராட்டம் தொடர்ந்து இடம்பெற்று வருகின்றது.

இந்நிலையில், அந்த இடத்துக்கு வருகை தந்த பொலிஸார் தற்காலிக கூடாரங்களை அகற்றினர். இதையடுத்து மக்களுக்கும் பொலிஸாருக்கும் இடையில் ஏற்பட்ட வாய்த்தர்க்கம் காரணமாக அவ்விடத்தில் அமைதியின்மை ஏற்பட்டது.

# வடக்கு சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் ஜெகத் பளிக்காரவுக்கு திடீர் இடமாற்றம்!

வடக்கு மாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் ஜெகத் பளிக்காரவுக்கு உடன் நடைமுறைக்கு வரும் வகையில் இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது.

அந்த வெற்றிடத்துக்கு சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் ஜெயந்த வீரசூரிய

2



# ஜே.வி.பியின் 3 நாள் பேரணி இன்று பேருவளையில் ஆரம்பம்



ஜே.வி.பி. மற்றும் தேசிய மக்கள் சக்தி ஆகியன இணைந்து தற்போதைய அரசுக்கு எதிராக நடத்தும் மூன்று நாள் ஆர்ப்பாட்டப் பேரணி இன்று முற்பகல் பேருவளையில் ஆரம்பமானது.

நாளை மறுதினம் அது கொழும்பை வந்தடையும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

# மோட்டார் சைக்கிள் விபத்தில் 2 மாணவர்கள் பரிதாபச் சாவு!



தம்புள்ளை - வேமடில்ல குளத்தில் மோட்டார் சைக்கிள் கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில் பாடசாலை மாணவர்கள் இருவர் உயிரிழந்துள்ளனர். அத்துடன் மேலும் இரு மாணவர்கள் காயமடைந்துள்ளனர்.

வேகக் கட்டுப்பாட்டை இழந்த நிலையில், இந்த மோட்டார் சைக்கிள் வீதியை விட்டு விலகி குளத்தில் வீழ்ந்துள்ளது என விசாரணைகளில்

2

### பதவி விலகமாட்டார்.......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மக்கள் மத்தியில் ஏற்பட்டுள்ள அரச எதிர்ப்பு அலையால் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ பதவி விலகுவது குறித்து பரிசீலித்து வருகின்றார் எனவும், புதிய பிரதமராக நாமல் ராஜபக்ஷ நியமிக்கப்படலாம் எனவும் தென்னிலங்கை ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இது தொடர்பில் நாமல் எம்.பியிடம் வினவியபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

விரைவில் பொருளாதார நிலைமைகள் மீளவும் கட்டமைக்கப்பட்டு அரசியல் நிலைமைகளும் சுமுகமாக்கப்படும். ஜனாதிபதி அதற்குரிய நடவடிக்கைகளை முன்னெடுக்கவுள்ளார்.

என்னைப் பொறுத்தவரையில் புதிய அமைச்சரவையில் அமைச்சுப் பதவியைப் பெற்றுக்கொள்ள வேண்டும் என்ற இலக்குக்கூட கிடையாது - என்றார்.

### நாமல் தலைமையில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இது தொடர்பில் நெலும் மாவத்தையில் உள்ள கட்சி அலுவலகத்தில் இருந்து, சம்பந்தப்பட்ட தரப்பினருக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இதன்படி, எதிர்காலத்தில் நாடளாவிய ரீதியில் அரசுக்கு ஆதரவான பிரசார செயற்திட்டமொன்றை முன்னெடுப்பது தொடர்பில் கலந்துரையாடப்படவுள்ளது எனது தெரிவிக்கப்படுகின்றது.

### வடக்கு சிரேஷ்ட...........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நியமிக்கப்பட்டுள்ளார். அதனடிப்படையில் வடக்கு மாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் ஜெகத் பளிக்கக்கார சமூக பொலிஸ் பிரிவுக்குப் பொறுப்பாகச் செல்லவுள்ளமையுடன் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் ஜெயந்த வீரசூரிய, வடக்கு மாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபராக நியமிக்கப்பட்டுள்ளார்.

### மோட்டார் சைக்கிள்......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரியவந்துள்ளது. நேற்றிரவு இடம்பெற்ற இந்த விபத்தில், மோட்டார் சைக்கிளில் 2 மாணவர்கள் உள்ளடங்கலாக நால்வர் பயணித்துள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

விபத்தில் உயிரிழந்த 16 வயதுடைய மாணவர்கள் இருவரும் கலேவெல, புவக்பிட்டிய, நடைகஹவத்த பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள். விபத்தில் படுகாயமடைந்த 18 மற்றும் 16 வயதுடைய ஏனைய இரு மாணவர்களும் தம்புள்ளை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர் என்றும் பொலிஸார் மேலும் குறிப்பிட்டனர்.

### அமைச்சுப் பதவி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நான் எந்தவொரு அமைச்சுப் பதவியையும் ஏற்றுக்கொள்ளப்போவதில்லை என்று தீர்மானித்துள்ளேன். எனினும், நாட்டுக்காகவும், மக்களுக்காகவும் நிறைவேற்ற வேண்டிய கடமைகளை நிச்சயம் செய்வேன் என்றும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அறிவித்துள்ள புதிய அமைச்சரவையில் 15 பேரே அமைச்சுப் பதவிகளை ஏற்க வருகின்றனர். இந்நிலையிலேயே ரியர் அட்மிரல் சரத் வீரசேகர மேற்கண்டவாறு அறிவித்துள்ளார்.

### அலி சப்றி......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதன்படி, அமெரிக்காவின் வொஷிங்டனில் உள்ள சர்வதேச நாணய நிதியத்தின் தலைமையகத்துக்குச் செல்லும் அவர்கள், ஏப்ரல் 19 முதல் 24ஆம் திகதி வரை சர்வதேச நாணய நிதியத்துடன் பேச்சுகளில் ஈடுபடவுள்ளனர்.

சர்வதேச நாணய நிதியத்தின் பேச்சு வெற்றியடையும் பட்சத்தில் இலங்கைக்கு 400 கோடி அமெரிக்க டொலர் கிடைக்கும் என எதிர் பார்க்கப்படுகின்றது.

ஐந்து தவணைகளில் இது இலங்கைக்குக் கிடைக்கவுள்ள நிலையில் இதன் மூலம் உலக நிதித்துறையின் நம்பகத்தன்மையை உறுதிசெய்யும் வாய்ப்பு இலங்கைக்கு கிடைக்கும் எனவும் கூறப்படுகின்றது.

### காலிமுகத் திடலில்..........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதேவேளை, இந்தப் போராட்டத்துக்கு ஆதரவாக யாழ்ப்பாணத்தில் இன்று ஜனநாயகத்துக்காக ஒன்றிணைந்த இளையோர்களின் ஏற்பாட்டில் தீப்பந்தப் போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது என அந்த அமைப்பு தெரிவித்துள்ளது.

யாழ். பண்ணைக் கடற்கரையில் இன்று மாலை 6.30 மணியளவில் இந்தத் தீப்பந்தப் போராட்டம் இடம்பெறவுள்ளது.







விளம்பரத் தொடர்புகளுக்கு -
தொலைபேசி இலக்கம்-
076 443 8622






காலைக்கதிர் மாலைப்பதிப்பு



# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## நாடாளுமன்றத்தில் புதிய நாடகம்

**பிரதமர் தவிர்ந்த அமைச்சரவையின் ஏனைய முழு அங்கத்தவர்களும் பதவி விலகி இரண்டு வாரங்களாகுகின்றன.**

**அதன்பின்னர் நியமிக்கப்பட்ட நான்கு அமைச்சர்களோடு இரண்டு வாரங்கள் கடத்தப்பட்டு விட்டன.**

**ஏற்பட்ட அரசியல் நெருக்கடிக்க்கு ஒரு தெளிவான – தீர்க்கமான – முடிவு காணப்படாமலேயே நாளை புதிய அமைச்சரவை பெரும்பாலும் முழுமை பெறும் என்பது உறுதியாகியுள்ளது.**

**ஆளும் தரப்பில் இருந்து வெளியேறி, தனித்தனி வெவ்வேறு குழுக்களாக – சுயாதீன அணிகளாக – இயங்கப் போகின்றனர் என அறிவித்த நாற்பத்தியிரண்டு எம்.பிக்களில் சிலர் புதிய அமைச்சர் பதவிகளை பெற்றாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.**

**ஆனால் விமல் வீரவன்ஸ, உதய கம்மன்பில, வாசுதேவ நாணயக்கார மற்றும் சுதந்திரக் கட்சியினர் என எவரும் இல்லாமல் புதிய அமைச்சரவை நியமனமாவது அத்தரப்பினருக்கு கடுப்பை ஏற்படுத்தும் விவகாரம் என்பது புரிந்து கொள்ளத்தக்கதே.**

**நாளை புதிய அமைச்சரவை பதவியேற்றதும் சர்ச்சைக் களத்துக்கான தெளிவான கோடு வரையப்பட்டுவிடும். ஒருபுறம் அரசுக்கு ஆதரவு தரப்பு. மறுபுறம் எதிர்த்தரப்பு என்று நிலைமை தெளிவாகிவிடும்.**

**ஜீவன் தொண்டமானின் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் போன்ற ஒருசிலவற்றின் எம்.பிக்கள் மட்டும் கோட்டின் இந்தப் பக்கமும் இல்லாமல், அந்தப் பக்கமும் இல்லாமல், இரண்டுங்கெட்டான் நிலைப்பாட்டை எடுக்கக்கூடும்.**

**ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கும் அவரது ராஜபக்ஷ குடும்பத்துக்கும், அவர்கள் சார்பான ஆளும் தரப்புக்கும் எதிராக நாடாளாவிய ரீதியில் பேரெழுச்சியாகக் கிளர்ந்து வரும் எதிர்ப்பை நோக்கும்போது அவர்களது தரப்போடு இனி அணி சேருவது பல எம்.பிமாருக்கு நெருக்கடியானதாக இருக்கும் என்பது புரியத்தக்கதே.**

**ராஜபக்ஷ ஆதரவு நிலைப்பாட்டை வெளிப்படுத்தினால் தத்தமது தொகுதிகளுக்கு அவர்கள் செல்ல முடியாது, அவர்களின் அரசியல் எதிர்காலம் படுத்துவிடும் என்றெல்லாம் சிக்கல்கள் காத்திருக்கின்றன.**

**அதனால் ஆளும் தரப்புடன் சாய்ந்து நின்று அரசியல் செய்வதற்காக இதுவரை ‘மதில் மேல் பூனைகள்’ ஆக நிலைப்பாடு எடுத்த எம்.பிக்கள் பலரும் இம்முறை அதனைச் செய்ய முடியாது, ஏதோ ஒரு பக்கம் சாய வேண்டிய இக்கட்டில் சிக்கி இருக்கின்றனர்.**

**நாளை அமைச்சர்கள் பதவியேற்புத் திருவிழா நடந்ததுமே அடுத்த நாள் நாடாளுமன்றம் கூடுகின்றது. நாடாளுமன்றக் கூட்டத்தொடர் ஆரம்பமாகி ஓரிரு நாள்களில் கோட்டாபய அரசுக்கு எதிராகப் பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி முன்னெடுக்கும் நம்பிக்கையில்லாப் பிரேரணை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படுவதற்கு வாய்ப்புகள் தென்படுகின்றன.**

**ஆகவே, நாளை புதிதாகப் பதவியேற்கும் அமைச்சர்கள் ஆயத்துக்கு ஓரிரு தினங்களிலேயே தனது ஆதரவுப் பெரும்பான்மையை நாடாளுமன்றத்தில் உறுதிப்படுத்த வேண்டிய அமிலச் சோதனை தயாராகக் காத்திருக்கின்றது.**

**அதில் ஆளும் தரப்பு தோற்கடிக்கப்படுமானால் அதன் பின்னர் இப்போது எதிரணியில் இருக்கும் தரப்புகளின் வழிகாட்டல்படி ஓர் அமைச்சரவையை இடைக்கால அரசாகவோ – காபந்து அரசாகவோ –தேசிய அரசாகவோ – நியமிக்க வேண்டிய கட்டாயம் ஆட்சித் தலைவருக்கு ஏற்படும். ஆக, புதிய நாடாளுமன்றச் சமருக்கான கோடுகள் தெளிவாக வரையப்பட்டுவிட்டன. புதிய நாடகத்துக்கான திரை விலகுகின்றது.**

## காணாமலாக்கப்பட்ட எங்கள் உறவுகளுக்காக போராடுவதற்கு முதலில் ஒன்றுபட்டு வாருங்கள்!

### ‘கோட்டா கோ ஹோம்’ போராட்டத்துக்குப் போகும் தமிழ் இளைஞர்களிடம் சிறிதரன் எம்.பி. கோரிக்கை





இத்தனை நாள்களாக வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகள் தங்களின் சொந்தங்களைத் தேடி தெருக்களில் போராடிக் கொண்டு இருக்கிறார்கள். அவர்களுக்காக ஒரு நாள் ஆயிரம் இளைஞர்கள் கிளிநொச்சியில் திரளுங்களேன்.

– இப்படி தமிழ் இளைஞர்களிடம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் அவர்கள் பகிரங்கமாக ஒரு கோரிக்கை விடுத்துள்ளார்.

‘கோட்டா போ’ போராட்டத்துக்குப் போகும் தமிழ் இளைஞர்களிடமே இப்படிக் கேள்வி எழுப்பியிருக்கின்றார் அவர்.

தர்மபுரம் பகுதியில் கண்டாவளை பிரதேச பொது அமைப்புக்களின் பிரதிநிதிகளுடனான சந்திப்பின் போதே அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

நான்கு லட்சம் மக்கள் முள்ளிவாய்க்காலில் இருந்த போது 70 ஆயிரம் மக்கள் தான் இருக்கின்றனர் எனக் கூறி ஆறு மாதங்களுக்கு மேல் உணவு அனுப்பாமல், உணவில்லாமலே மக்கள் சாகடிக்கப்பட்ட போது – மக்கள் காயங்களுக்கு மருந்துகள் இல்லாமல் கொல்லப்பட்டபோது – பாதுகாப்பு வலயம் என அறிவித்துவிட்டு, அதற்குள் அனைவரையும் செல்லுமாறு கூறி விட்டு அந்த இடத்திற்குள் கொத்துக் குண்டுகளையும் பறாஜ் குண்டுகளையும் வீசி எமது மக்களை அரசாங்கம் கொன்ற போது – இந்தச் சிங்கள மாணவர்கள், சிங்களச் சகோதரர்கள் எல்லோரும் அவற்றை வேறு விதமான வெறித்தனத்துடன் பார்த்தார்கள். நமது மக்களின் செயற்பாட்டை பயங்கரவாதமாகப் பார்த்தார்கள். தமிழர்களை அழிப்பதை ஏற்றுக்கொண்டார்கள். சிங்கள இளைஞர்களும் யுவதிகளும் அந்தச் செயல்களைப் பாற்சோறு கொடுத்துக் கொண்டாடினார்கள். எல்லோரின் வீடுகளிலும் சிங்கக் கொடிகள் பறக்க விடப்பட்டன. சிங்கள மக்கள் எல்லோரும் அவற்றை மகிழ்ச்சியோடு பார்த்தார்கள். 69 லட்ச சிங்கள மக்கள் வாக்களித்து கோட்டபாய ராஜபக்ஷவை ஜனாதிபதி ஆக்கினார்கள். இவை எல்லாம் நடந்தவை.

இப்போது நாங்கள் போய் அவர்களோடு சேர்ந்துதான் – எங்களுடைய இளைஞர்களும் சேர்ந்துதான் – போராட வேண்டும் என்றால், போகும் இளைஞர்களிடம் நான் பகிரங்கமாக ஒன்றைக் கேட்கிறேன். இத்தனை நாள்களாக வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகள் தங்களின் சொந்தங்களைத் தேடி தெருக்களில் போராடிக் கொண்டு இருக்கிறார்கள். அவர்களுக்காக ஒரு நாள் ஆயிரம் இளைஞர்கள் கிளிநொச்சியில் திரளுங்களேன். அதற்கு எங்கள் இளைஞர்கள் தயாரில்லை. கைகளால் ஒப்படைக்கப்பட்ட கணவன்மார், கைகளால் ஒப்படைக்கப்பட்ட பிள்ளைகள், கைகளால் ஒப்படைக்கப்பட்ட பச்சிளம் குழந்தைகள், பிள்ளைகள் யாருமே இல்லை. எங்கு என்றும் தெரியாது. இவர்களைத் தேடியவாறு இருக்கும் தாய்மார்களுடன் ஆயிரம் இளைஞர்கள் ஒன்று சேர்ந்து போராடுங்கள் என உங்களைப் பகிரங்கமாக கேட்கிறேன்.

சிங்கள இளைஞர்களின் போராட்டத்திற்குக் குரல் கொடுக்க வேண்டும் என்று தயாராகிக் கொண்டிருக்கும் ஜனநாயகத்தின் இளைஞர்கள், வலிந்து காணாமலாக்கப்பட்ட உறவுகளின் போராட்டம் பற்றி பேசினால் அந்த இளைஞர்களின் பாதங்களுக்கு பூப் போட்டு வணங்கவும் தயாராக இருக்கிறோம்.

நாங்கள் போராடுவது – எங்களுடைய உரிமைகளுக்காக, இழந்துபோன இறைமைகளை மீட்டெடுப்பதற்காக, எங்களுடைய மண்ணில் சுயாட்சி முறையிலான உரிமையை வென்றெடுக்க நாங்கள் போராடுகிறோம். இது முற்றுமுழுதான உரிமைக்கான போராட்டம். உயிர் வாழ்தலுக்கான போராட்டம். அடுத்த பரம்பரையின் நிம்மதிக்கான போராட்டத்தைத்தான் நாம் இந்த மண்ணில் நடாத்துகிறோம்.

நாங்கள் எரிபொருளுக்காக போராடவில்லை. எரிவாயுவிற்காக போராடவில்லை. நாங்கள் மின்சாரத்திற்காக போராடவில்லை. உணவிற்காக நாங்கள் போராடவில்லை. இவை இல்லாமல் நாங்கள் வாழ்ந்தவர்கள். நாங்கள் யாருடைய போராட்டத்தையும் கொச்சைப்படுத்தவில்லை. நீங்கள் போராடுவது ஒரு கொடுங்கோலனுக்கு எதிராக. இனப்படுகொலையாளிக்கு எதிராக. மஹிந்த ராஜபக்ஷ, கோட்டபாய ராஜபக்ஷ என்கிற இருவரும் இந்த மண்ணில் தமிழ்த் தேசிய இனத்தை படுகொலை செய்தவர்கள். அவர்களுக்கெதிராகப் போராடுகிறீர்கள். நாம் உங்களுக்கு முதலே – 2019 ஆம் ஆண்டிலேயே – இவர்களுக்கு எதிராகப் போராடியிருக்கிறோம்.

கடந்த காலங்களில் சிங்கள மக்கள் போராடிய போது தமிழர்கள் ஆதரவு நல்கியிருக்கிறார்கள். அவர்கள் தங்களின் பிரச்சினை தீர்ந்ததும் தமிழர்களுக்கு எதிராக மாறியிருக்கின்ற பல சம்பவங்கள் வரலாறுகளில் நடைபெற்றிருக்கின்றன – என்று அவர் மேலும் தெரிவித்தார்

## ரயில் - மோ.சைக்கிள் விபத்தில் தந்தையும் மகனும் உயிரிழப்பு

பலப்பிட்டிய வெலிவத்தை ரயில்வேக் கடவையில் மோட்டார் சைக்கிள் ஒன்று ரயிலுடன் நேற்று மோதியதில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த இருவர் உயிரிழந்துள்ளனர்.

பலபிட்டிய – வெலிவத்தையில் உள்ள கடவையில் அவர்கள் ஓட்டிச் சென்ற மோட்டார் சைக்கிள் ரயிலுடன் மோதியுள்ளது.

மோட்டார் சைக்கிளில் பயணித்த 41 வயதுடைய தந்தையும் 15 வயதுடைய மகனுமே உயிரிழந்துள்ளனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## வீட்டில் பதுக்கி வைக்கப்பட்டிருந்த 230 எரிவாயு சிலிண்டர்கள் சிக்கின

அதிகவிலைக்குவிற்பனைசெய்வதற்காக, கினிகத்தேனை – அம்பகமுவ பகுதியில் உள்ளவீடொன்றில்பதுக்கிவைக்கப்பட்டிருந்த 230வீட்டுசமையல்எரிவாயுகொள்கலன்கள் கைப்பற்றப்பட்டுள்ளன.

பொலிஸாரும், நுவரெலியா மாவட்ட நுகர்வோர் விவகார அதிகார சபை அதிகாரிகளும் இணைந்து முன்னெடுத்த சுற்றிவளைப்பில் இந்த எரிவாயு கொள்கலன்கள் மீட்கப்பட்டுள்ளன.

12.5 கிலோகிராம் எடைகொண்ட 177 கொள்கலன்களும், 5 கிலோகிராம் எடைகொண்ட 28 கொள்கலன்களும், 2.5 கிலோகிராம் எடைகொண்ட 25 கொள்கலன்களும் இவ்வாறு கைப்பற்றப்பட்டுள்ளன. இதே வேளை, இந்த எரிவாயுக் கொள்கலன்கள் பதுக்கி வைக்கப்பட்டிருந்த வீட்டின் உரிமையாளர் கைது செய்யப்பட்டுள்ளார்.

# சிம்பாப்வேயில் பேருந்து விபத்து; 35 பேர் சாவு



சிம்பாப்வே நாட்டில் ஈஸ்டரையொட்டி சிமானிமானி நகரத்தில் இருந்து மஸ்விங்கோ நகரில் உள்ள தேவாலயத்திற்கு நேற்றிரவு பேருந்து சென்றுகொண்டிருந்தது.

இந்த பேருந்து மஸ்விங்கோ அருகே வந்தபோது திடீரென பள்ளத்தாக்கில் விழுந்து விபத்துக்குள்ளானது.

இந்த விபத்தில் 35 பேர் பலியானார்கள். 70க்கும் மேற்பட்டவர்கள் காயமடைந்தனர். உடனடியாக அவர்கள் அனைவரும் மீட்கப்பட்டு அருகிலிருந்த மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர். விபத்தில் சிக்கிய பேருந்தில் 100க்கும் அதிகமானோர் பயணித்துள்ளனர்.

அதிக எண்ணிக்கையிலான பயணிகள் பயணித்தமையே பேருந்து விபத்துக்கான காரணம் எனக் கூறப்படுகிறது

# இரண்டு புதிய ஏவுகணைகளை இன்று ஏவியது வடகொரியா!



அணுசக்தித் திறனை மேம்படுத்தும் நோக்குடன் இரண்டு புதிய ஏவுகணைகளை ஏவி வடகொரியா இன்று ஞாயிற்றுக்கிழமை காலை சோதனை நடத்தியுள்ளது. இந்தச் சோதனையை வட கொரியத் தலைவர் கிம் ஜாங் உன் நேரில் அவதானித்தார் என வட கொரிய அரச செய்தி நிறுவனமான (KCNA) தெரிவித்துள்ளது.

வட கொரிய மிக விரைவில் அணு ஆயுத சோதனையை மீண்டும் தொடங்க முயன்று வருவதாக தென் கொரியா மற்றும் அமெரிக்க அதிகாரிகள் ஏற்கனவே எச்சரித்துள்ள நிலையில் இந்த சோதனை இடம்பெற்றுள்ளது.

கடந்த மாதம் ஆயிரக்கணக்கான கிலோ மீற்றர் தூரம் அணு ஆயுதங்களை சுமந்து சென்று இலக்கை துல்லியமாக தாக்கக் கூடிய கண்டம் விட்டு கண்டம் பாயும் ஏவுகணை (ICBM) சோதனையை நடத்தியதை அடுத்து வட கொரியா மீதான தடைகள் மேலும் இறுக்கமாக்கப்பட்ட பின்னர், மற்றொரு முக்கிய ஆயுத சோதனையாகவும் இது அமைந்துள்ளது.

வடகொரியாவின் ஹேம்ஹங் பகுதியில் வைத்து இன்று காலை பரிசோதனை செய்யப்பட்ட இந்த இரு ஏவுகணைகளும் 110 கிலோ மீற்றர்கள் தொலைவை சென்று தாக்கியுள்ளன. அதிக அளவாக 25 கி.மீ. உயரத்திற்கு இந்த ஏவுகணைகள் பறந்து சென்றுள்ளன என தென் கொரியாவின் இராணுவம் தெரிவித்துள்ளது.

எனினும் இன்று பரிசோதனை செய்யப்பட்ட இரண்டு ஏவுகணைகள் குறித்த எந்த மேலதிக விவரங்களையும் வட கொரிய அரச செய்தி நிறுவனம் வெளியிடவில்லை. ஆனால் இது வட கொரியாவின் அணு சக்தி நோக்கங்களுடன் இணைந்தது எனத் தெரிவித்துள்ளது.

இந்தச் சோதனை நீண்ட தூர ஆயுதங்களின் திறனை மேம்படுத்துவதற்கான நோக்கத்துடன் அமைந்திருந்ததாகவும் கே.சி.என்.ஏ. கூறியுள்ளது.

நாட்டின் தற்பாதுகாப்புத் திறன் மற்றும் அணு ஆயுதப் போர்ப் படைகளை மேலும் வலுப்படுத்துவதற்கான வழிகாட்டல்களை கிம் ஜாங் உன் ஆயுதப் படைகளுக்கு வழங்கியுள்ளதாவும் அச்செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறுகிய தூர பாலிஸ்டிக் ஏவுகணைகளையும் வட கொரியா தொடர்ச்சியாக உருவாக்கி வருகிறது. அவை போர் ஒன்று ஏற்பட்டால் தென் கொரியாவில் உள்ள இலக்குகளைத் தாக்க ஏற்ற வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளதாக பாதுகாப்பு ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

இதேவேளை, வட கொரியா போரை விரும்பவில்லை. ஆனால் வட கொரியா மீது தாக்குதல் நடத்தினால் அணு ஆயுதங்களை பயன்படுத்தி கூட பதில் தாக்குதல் நடத்த தங்கள் நாடு தயங்காது என கடந்த ஏப்ரல் 5 ஆம் திகதி கருத்து வெளியிட்ட வட கொரிய கிம்மின் சக்திவாய்ந்த சகோதரியான கிம் யோ ஜாங் எச்சரித்தார்.

இதற்கிடையே தென் கொரியாவின் தற்போதைய ஜனாதிபதி மூன் ஜே-இன் மே 10 ஆம் திகதி பதவியில் இருந்து வெளியேற வுள்ளார். இந்நிலையில் வடகொரியாவின் ஏவுகணை சோதனைகள் குறித்து மூன் ஜே-இன் முழுமையாக அவதானித்து வருகிறார் என அவரது அலுவலகம் தெரிவித்துள்ளது.



# புலம்பெயர் பாகிஸ்தானியர்களிடம் நன்கொடை கேட்கும் இம்ரான் கான்

ஆட்சி மாற்றத்திற்கான வெளிநாட்டு சதியின் மூலம் பாகிஸ்தான் மக்கள் மீது ஊழல் அரசாங்கம் திணிக்கப்பட்டிருப்பதாக இம்ரான் கான் குற்றம்சாட்டி உள்ளார்.

பாகிஸ்தான் நாடாளுமன்றத்தில் பிரதமர் இம்ரான் கான் மீதான நம்பிக்கையில்லா பிரேரணை நிறைவேற்றப்பட்டதையடுத்து, புதிய பிரதமராக பாகிஸ்தான் முஸ்லிம் லீக் (என்) தலைவர் ஷெபாஸ் ஷெரீப் பிரதமராக தேர்ந்தெடுக்கப்பட்டார். வெளிநாட்டு சதி காரணமாக தனது ஆட்சி கவிழ்க்கப்பட்டதாக இம்ரான் கான் குற்றம்சாட்டுகிறார்.

இந்நிலையில் பாகிஸ்தானில் பதவியேற்றுள்ள புதிய அரசுக்கு எதிராக, உண்மையான சுதந்திரம் என்ற பெயரில் இம்ரான் கான் பிரசாரத்தை தொடங்கி உள்ளார். இதற்காக வெளிநாடுவாழ் பாகிஸ்தானியர்களிடம் நன்கொடை வழங்கும்படி கேட்டுக்கொண்டுள்ளார்.

இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள வீடியோ செய்தியில், ஆட்சி மாற்றத்திற்கான வெளிநாட்டு சதியின் மூலம் பாகிஸ்தான் மக்கள் மீது ஊழல் அரசாங்கம் திணிக்கப்பட்டிருப்பதாகவும், இது 22 கோடி பாகிஸ்தான் மக்களை அவமதிக்கும் செயல் என்றும் குற்றம்சாட்டி உள்ளார்.

அரசுக்கு எதிரான பிரசாரத்துக்காக பி.டி.ஐ. கட்சி, வெளிநாடுகளில் உள்ள பாகிஸ்தானியர்களிடம் இருந்து நிதி திரட்ட, இணைய தளத்தை தொடங்கியுள்ளது. ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்திய வெளிநாட்டு சதியை முறியடித்து, தேர்தல் நடத்த அழுத்தம் கொடுப்போம். பாகிஸ்தான் மக்கள் தங்கள் அரசை தீர்மானிக்கட்டும் என இம்ரான் கான் கூறி உள்ளார்

# சீன அடக்குமுறையை எதிர்த்து ஷாங்காய் மக்கள் போராட்டம்



ஷாங்காய் நகரில் ஒமிக்ரான் எக்ஸ்இ பரவலை அடுத்து சீன அரசு பல்வேறு கட்டுப்பாடுகளை விதித்துள்ளது. இந்த அடக்குமுறையை எதிர்த்து ஷாங்காய் மக்கள் போராட்டம் நடத்தி வருகின்றனர்.

இரண்டரை கோடி மக்கள் வசிக்கும் சீனாவின் முக்கிய வர்த்தக நகரம் ஷாங்காய். இங்கு தற்போது ஒமிக்ரான் எக்ஸ்இ ரக வைரஸ் பரவல் அதிகரித்துள்ளதால் பல்வேறு ஊரடங்கு கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன. இதனை அப்பகுதி மக்கள் கடுமையாக எதிர்த்து வருகின்றனர்.

தங்களது வாழ்வாதாரம் கருதி முழு ஊரடங்கை நீக்கி தாங்கள் பணிக்குச் செல்ல அனுமதிக்குமாறு அவர்கள் ஷாங்காய் மாகாண அரசுக்கு வேண்டுகோள் விடுத்து வந்தனர்.

ஆனால் சீன அரசு தொடர்ந்து கட்டுப்பாடுகளை அதிகரித்து வருகிறது.

இதனால் அப்பகுதி மக்கள் பலர் வாழ்வாதாரத்திற்கு வழியின்றி தவித்து வருகின்றனர். இந் நிலையில் தற்போது சீன அரசு புதிய உத்தரவு ஒன்றை ஏற்றுள்ளது. இதன்படி கொரோனா தாக்கத்தால் பாதிக்கப்பட்ட சீன குடிமக்களுக்கு ஷாங்காய் மக்கள் தங்கள் இல்லங்களை அளிக்க சீன அரசு உத்தரவிட்டது.

இதனால் கொதிப்படைந்த ஷாங்காய் குடிமக்கள் பொலிஸாருடன் மோதல் போக்கில் ஈடுபட்டனர். மேலும் பொது இடத்தில் இதனை எதிர்த்து போராடினர்.

சீன கம்யூனிஸ அரசு சாலை மறியல், தர்ணா உள்ளிட்டவற்றை என்றுமே அனுமதித்ததில்லை. அவ்வாறு குடிமக்கள் போராடினால் அவர்களை இரும்புக்கரம் கொண்டு அடக்குவது தான் கம்யூனிஸ கொள்கையின் சாமர்த்தியம். ஆனால் தற்போது வீடின்றி தவிக்கும் ஷாங்காய் மக்கள் அரசின் அடக்குமுறையை மீறி தற்போது தங்களை கட்டுப்படுத்தும் பொலிஸாரிடம் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# ஜேர்மன் நாட்டு எம்.பி. மோஹாத் மட்டு. மாநகர சபைக்கு விஜயம்

ஜேர்மன் நாடாளுமன்ற உறுப்பினர் மோஹாத் மட்டக்களப்பு மாநகரசபைக்கு விஜயம் ஒன்றை மேற்கொண்டுள்ளார்.

மட்டக்களப்பு மாநகரசபையின் முதல்வர் தி.சரவணபவன் அவரை வரவேற்றதுடன், மாநகரசபையின்வாகனபகுதியையும்பார்வையிட்டனர்.

2003ஆம் காலப்பகுதியில் ஜேர்மன் நாடாளுமன்ற உறுப்பினர் மோஹாத் ஜேர்மனியின் முனீச் மாநகர முதல்வராகவிருந்த காலப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட ஒப்பந்தத்தின் கீழ் பல்வேறு அபிவிருத்திப் பணிகள் மட்டக்களப்பு மாநகரசபைக்குட்பட்ட பகுதியில் முன்னெடுக்கப்பட்டிருந்தன.

மட்டக்களப்பு மாநகரசபைக்கும் ஜேர்மன் முனிச் மாநகரசபைக்கும் இடையில் மேற்கொள்ளப்பட்ட உடன்படியின் கீழ் பெருமளவான திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டிருந்தன.

இந்த நிலையில் கிழக்கு மாகாணத்திற்கு விஜயம் செய்திருந்த ஜேர்மன் முனீச் முன்னாள் முதல்வரும் தற்போதைய நாடாளுமன்ற உறுப்பினருமான ஜேர்மன் நாடாளுமன்ற உறுப்பினர் மோஹாத்துக்கு மட்டக்களப்பு மாநகரசபையில் வரவேற்பளிக்கப்பட்டது.

இதன்போது மாநகரசபைக்கு உடன்படிக்கையின் கீழ் 2003ஆம் ஆண்டு அன்பளிப்பு செய்யப்பட்ட வாகனங்களையும் பார்வையிட்ட நாடாளுமன்ற உறுப்பினர் குறித்த வாகனங்கள் சிறந்த முறையில் பராமரிக்கப்படுகின்றமை குறித்து முதல்வருக்குத் தனது பாராட்டுகளைத் தெரிவித்தார்.

அதனைத் தொடர்ந்து மாநகரசபையின் மண்டபத்தில் மாநகரசபை முதல்வர் உறுப்பினர்கள், உத்தியோகத்தர்களைச் சந்தித்துக் கலந்துரையாடினார்.

கடந்த காலத்தில் ஜேர்மன் முனீச் மாநகர சபையினால் மட்டக்களப்பு மாநகரசபையில் மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்திப் பணிகள் மற்றும் உதவிகளுக்கு நன்றி தெரிவித்த மட்டக்களப்பு மாநகரசபை முதல்வர் தி.சரவணபவன், எதிர் காலத்தில்ஜேர்மன்அரசுஊடாகஒப்பந்தங்களைச் செய்து மேலும் அபிவிருத்திப் பணிகளை எதிர் பார்க்கிறேன் என தெரிவித்தார்.

# தியாவட்டவானில் யானைகள் குடியிருப்புக்குள் புக முயற்சி



வாழைச்சேனை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட தியாவட்டவான் மற்றும் காகித நகர் பகுதிகளுக்குள் பெரும் கூட்டமாக வந்த யானைகள் மக்கள் குடியிருப்புக்குள் நுழைய முயற்சி செய்துள்ளன.

நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இரவு 11.00 மணியளவில் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது. பிரதேச இளைஞர்கள் ஒன்றிணைந்து யானைகளை பட்டாசுகளை வெடிக்கச் செய்தும் நெருப்பு பந்தங்களை ஏந்தியும் துரத்தியடித்துள்ளனர்.

# மாளிகைக்காடுமக்களுக்கு பேரீச்சம்பழம் விநியோகம்



மாளிகைக்காடு நிருபர்

அம்பாறை மாவட்ட மக்களுக்கு புனித ரமழான் மாதத்தை முன்னிட்டு பேரீச்சம்பழ பொதி வழங்கும் செயற்றிட்டம் கல்முனையன்ஸ் போரமினால் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது. அதன் ஒரு கட்டமாக காரைதீவு பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட மாளிகைக்காடு பிரதேசத்தில் அடையாளம் காணப்பட்ட குடும்பங்களுக்கான பேரீச்சம்பழ பொதி வழங்கும் நிகழ்வு அல் – மீஸான்பௌண்டன்ஸ்ரீலங்கா அமைப்பினரின் ஏற்பாட்டில் அமைப்பின் தவிசாளர் யூ.எல்.என். ஹூதா உமரின் தலைமையில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

கல்முனையன்ஸ் போரத்தின் வேண்டுகோளுக்கமைய ஆறாயிரம் தொன் பேரீச்சம்பழ தொகுதியை பெஸ்ட் புட் மார்க் கெடிங் பிரைவட் லிமிடெட் நிறுவனத்தினர் நன்கொடையாக வழங்கியிருந்தனர். அதனை அம்பாறை மாவட்டத்திலுள்ள சகல பிரதேசங்களில் இருந்தும் தெரிவுசெய்யப்பட்ட தொண்டர் அமைப்புக்கள் ஊடாக இனங்காணப்பட்ட பயனாளிக்குடும்பங்களுக்குவிநியோகிக்கப்பட்டு வருவதன் ஓர் அங்கமாகவே இந்நிகழ்வு மாளிகைக்காட்டில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் மாளிகைக்காடு கிழக்கு கிராம சேவையாளர் ஏ.எம். நஜீம், அல்– மீஸான் பௌண்டன் ஸ்ரீலங்கா அமைப்பின் பிரதித் தலைவர் பீ.எம். நாஸிக், பிரதம உதவி செயலாளர் மௌலவி என். சப்னி அஹமட், கலாச்சார விவகார தேசிய இணைப்பாளர் கலைஞர் என்.எம். அலிக்கான் உட்பட பலரும் கலந்து கொண்டனர்.



# மட்டு. பனிச்சையடியில் கைக்குண்டு ஒன்று மீட்பு

மட்டக்களப்பு கொக்குவில் பொலிஸ் பிரிவிலுள்ள பனிச்சையடி பிரதேசத்திலுள்ள பிரம்புகாட்டுபகுதியில்கைவிடப்பட்டிருந்த கைக்குண்டு ஒன்றை நேற்றுப் பிற்பகல் தாங்கள் மீட்டுள்ளோம் எனக் கொக்குவில் பொலிஸார் தெரிவித்தனர்.

விசேட புலனாய்வு பிரிவுக்கு கிடைத்த தகவல் ஒன்றை அடுத்து சம்பவ தினமான நேற்றுப் பிற்பகல் 3 மணியளவில் கொக்குவில் பொலிஸ் நிலைய பெரும் குற்றத்தடுப்பு பிரிவு பொறுப்பதிகாரி தலைமையிலான பொலிஸார் பனிச்சையடி பகுதியிலுள்ள பிரம்பு காட்டுப் பகுதியில் கைவிடப்பட்ட கைக்குண்டு ஒன்றை மீட்டனர்.

இந்தக் குண்டு பழுதடைந்துள்ளதால் நீதிமன்ற அனுமதியைப் பெற்று அதனைச் செயலிழக்க செய்வதற்கான நடவடிக்கையை தாங்கள் மேற்கொண்டு வருகின்றோம் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

# இறைச்சியாக்கப்பட்ட கோழிகளின் கழிவுகளை வீச வந்தவர்கள் சிக்கினர்

## துறைநீலாவணையில் சம்பவம்

மட்டக்களப்பு – களுவாஞ்சிக்குடி துறைநீலாவணைக்குச் செல்லும் பிரதான வீதியில் நேற்றுக் காலை மருதமுனையைச் சேர்ந்த இருவர் இறைச்சியாக்கப்பட்ட கோழிகளின் கழிவுகளை பொலித்தீன் பைகளில் இட்டு அதனை ஓட்டோவில் ஏற்றி வந்து துறைநீலாவணைப் பாதையில் வீசினார்கள்.

இவர்களைப் பின்தொடர்ந்த துறைநீலாவணையைச் சேர்ந்த இளைஞர் குழாம், பொதுமக்கள் ஒன்றிணைந்து அவர்களை மடக்கிப் பிடித்துள்ளமையுடன் அவர்களை எச்சரித்து, இருவரும் கொண்டு வந்த கழிவுகளை மீண்டும் ஓட்டோவில் ஏற்றி அனுப்பியுள்ளனர்.

இவ்விடயமாக பிரதேசத்திற்கு பொறுப்பான களுவாஞ்சிகுடி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி, களுவாஞ்சிகுடி பிரதேச செயலாளர். களுதாவளை பிரதேச சபை தவிசாளர் மற்றும் செயலாளர், துறைநீலாவணைக்கான பிரதேச சபை உறுப்பினர்,களுவாஞ்சிகுடி சுற்றாடல் பொறுப்பதிகாரி, துறைநீலாவணை தெற்கிற்கான கிராமசேவையாளர், பொதுச் சுகாதாரப் பரிசோதகர் போன்றோருக்குத் தொலைபேசி மூலம் தொடர்புகொண்டு தகவல்களையும் வழங்கியுள்ளனர்.

# மின்னல் தாக்கி இருவர் புல்மோட்டையில் சாவு



திருகோணமலை, புல்மோட்டை பிரதேசத்தில் நேற்றுமுன்தினம் மாலை மின்னல் தாக்கி இருவர் உயிரிழந்துள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

புல்மோட்டை – கரையாவெளி ஆற்றிற்கு இறால் பிடிப்பதற்காகச் சென்றபோதே மின்னல் தாக்கி இவர்கள் உயிரிழந்துள்ளனர் என ஆரம்பக்கட்ட விசாரணைகளின் மூலம் தெரியவந்துள்ளது.

புல்மோட்டைநாலாம்வட்டாரத்தைச்சேர்ந்த 70 வயதுடையவரும், புல்மோட்டை ஹமாஸ் நகரைச் சேர்ந்த 35 வயதுடையவருமே இச்சம்பவத்தில் உயிரிழந்துள்ளனர் எனத் தெரியவருகின்றது.

இச்சம்பவம் தொடர்பிலான மேலதிக விசாரணைகளை புல்மோட்டை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# நிறைவேற்றதிகார ஜனாதிபதி ஆட்சிமுறையை உடனடியாக நீக்குவதற்கு வலியுறுத்த வேண்டும்

## நீதியரசர் விக்னேஸ்வரன் எம்.பி. கூறுகின்றார்



நிறைவேற்றதிகார ஜனாதிபதி ஆட்சிமுறையை உடனடியாக நீக்குவதற்கு தமிழர்கள் வலியுறுத்த வேண்டும் என யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் நீதியரசர் க.வி.விக்னேஸ்வரன் கூறினார். நல்லூர் இளங்கலைஞர் மன்ற மண்டபத்தில் தற்போதைய அரசியல், பொருளாதார நிலைமை தொடர்பான சிவில் அமைப்புக்கள் மற்றும் கட்சிகளின் கூட்டம் நேற்றுப் பிற்பகல் நடைபெற்ற போது அதில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அங்கு அவர் மேலும் கூறியவை வருமாறு:-

இன்று இலங்கைத்தீவானது என்றும் காணாத பொருளாதார, அரசியல் நெருக்கடிக்குள் சிக்கித் தத்தளித்துக் கொண்டிருக்கின்றது. முக்கியமாக கொழும்பில் ஜனாதிபதி கோட்டாபய வையும் அவரின் சகோதரர்களையும் பதவி விலக வேண்டும் என்ற கூச்சலும் கூப்பாடும் வானை அதிர வைக்கின்றன.

வடகிழக்குத் தமிழ் மக்கள் 30 வருட கால போர்க் காலத்தின் போது அனுபவித்த அவலங்களின் அளவுக்குத் தென்பகுதி மக்கள் இதுவரை அனுபவிக்காவிட்டாலும் அத்தியாவசியப் பொருள்களின் தட்டுப்பாட்டின் நிமித்தமும் அவற்றின் விலைகள் வெகுவாக எகிறியதன் காரணமாகவும் அவர்களின் கோபம் ஜனாதிபதி மேல் காட்டப்பட்டு வருகின்றது.

போரின் போது சட்ட முறையற்ற அவரின் நடவடிக்கைகளால் அதிகம் பாதிக்கப்பட்டவர்கள் தமிழ் மக்களே. இன்று அவரை சிங்கள மக்களே வெளியேறு என்று கூறும் போது 'முற்பகல் செய்த வினை பிற்பகல் விளையும்' என்ற முதுமொழி நினைவுக்கு வருகின்றது. இன்றைய இந்தக் கூட்டம் எமது இனிமேலான நடவடிக்கைகள் எவ்வாறு அமைய வேண்டும் என்பதை ஆராயும் முகமாக நடைபெறுகின்றது.

இரண்டு கேள்விகளுக்கு நாங்கள் விடை காண வேண்டியுள்ளது.

1. கோட்டாபய வெளியேறினால் பொருளாதாரம் மற்றும் அரசியல் நிலைமைகள் சீராகுமா? என்பது.

2. அடுத்து என்ன என்பது அடுத்த கேள்வி.

எங்களுக்கு கோட்டாபய வெளியேற்றப்பட வேண்டும் என்பதில் எந்த ஒரு மாற்றுக் கருத்தும் இல்லை. ஆனால் அவர் போகின்றமையால் எமது பொருளாதாரப் பிரச்சினை தீருமா? அரசியல் பிரச்சினை தீருமா? அங்கு தான் நாம் ஒன்றைக் கவனிக்க வேண்டும். கோட்டாபய இயற்கையிலேயே பல குறைபாடுகளைக் கொண்டிருக்கின்றமை ஒரு புறம். ஆனால் அப்பேர்ப்பட்டவரை நிறைவேற்றதிகார ஜனாதிபதியாக்கிய மடமை மறுபுறம்.

நிறைவேற்றதிகார ஜனாதிபதி முறையை மாற்றினால் அன்றி கோட்டாபய போனாலும் அடுத்து வருபவரும் இவரைப் போலத் தான்தோன்றித்தனமாக இயங்கமுடியும் என்பதை நாம் மறுத்தலாகாது. எனவே 'கோட்டாபய வெளியேறு' என்று தென்புற மக்கள் கோஷம் எழுப்பும் போது சமாந்திரமாக அதே நேரத்தில் நிறைவேற்றதிகார ஜனாதிபதி முறைமையை முழுமையாக நீக்கு என்று நாம் குரல் கொடுக்க வேண்டிய நிலையில் உள்ளோம்.

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையால் பல பிரச்சினைகள் எழுந்துள்ளன. மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதம மந்திரி மற்றும் அமைச்சரவையினரது அதிகாரங்களை மீறி ஜனாதிபதி எதேச்சதிகாரமாக நடக்க 20 ஆவது திருத்தச் சட்டம் இடமளித்துள்ளது. அரச சேவையில் இருக்கும் ஏதேனும் ஒரு பதவிக்கு மக்கள் பிரதிநிதிகளின் இசைவைப் பெறாமல் யாரை வேண்டுமானாலும் நியமிக்க ஜனாதிபதிக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. இதனால்தான் ஓய்வு பெற்ற இராணுவ அதிகாரிகள் பலரை சிவில் பதவிகளுக்கு ஜனாதிபதி கோட்டாபய நியமிக்கக் கூடியமையாக இருந்தது. மற்றும் சுயாதீன ஆணைக்குழுக்களுக்கு கூட அவர் தம்மைச் சார்ந்தவர்களையே நியமித்துள்ளார். இன்று தான் பத்திரிகையில் படித்தேன்.

ஒரு வெளிநாட்டு இராஜதந்திர பதவிக்கு சினிமாவில் நடிக்கும் ஒரு சிங்கள ஹாஸ்ய நடிகரை நியமிக்க உள்ளார் என்று அவரின் ஒரேயொரு தகைமை ஜனாதிபதியைச் சென்ற தேர்தலின் போது அவர் ஆதரித்தார் என்பதுதான்.

ஒரு நாட்டின் அதிகாரங்கள் முறையே சட்டமியற்றல், சட்டத்தை நிறைவேற்றல், சட்டத்தை வெளிப்படுத்தல் ஆகிய மூன்று அங்கங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளன. அவை பிரிந்திருந்து அவற்றிற்குரியவர்கள் தங்கள் தங்கள் கடமைகளை சிறப்பாக ஆற்ற வேண்டும் என்பது ஜனநாயக முறைமையின் எதிர்பார்ப்பு. 20 ஆவது திருத்தமோ நிறைவேற்றல் அதிகாரம் கொண்ட ஜனாதிபதிக்கு கூடிய அதிகாரங்களை வழங்கி மூன்று அங்கங்களின் சமநிலைக்கு ஊறு விளைவித்துள்ளது. நாடாளுமன்றம் கூடும் போது மக்கள் பிரதிநிதிகளின் கருத்துக்களைக் கேட்டே நடவடிக்கைகளை எடுக்க வேண்டியுள்ளது. ஆனால் 20 ஆம் திருத்தச் சட்டத்தின் கீழ் ஜனாதிபதி பொறுப்புக் கூறல், வெளிப்படைத் தன்மை போன்றவற்றை முதனிலைப் படுத்தாமல் நடவடிக்கைகளை எடுக்க அது இடமளித்துள்ளது.

அடுத்து அவர் பதவியில் இருக்கும் போது சகல சட்டரீதியான நடவடிக்கைகளிலும் இருந்து நிறைவேற்று ஜனாதிபதியானவர் விலக்களிக்கப்பட்டுள்ளார்.

இதனை நாங்கள் மனதிற்கெடுத்தோமானால் இவ்வளவு பொது மக்களின் ஆர்ப்பாட்டங்கள், போராட்டங்கள் மற்றும் அவருக்கு எதிரான தனிப்பட்ட செயற்பாடுகளின் பின்னர் கூட ஏன் அவர் பதவி விலகாமல் இருக்கின்றார் என்றால் அவருக்கு எதிராக சட்டரீதியான நடவடிக்கைகளை எடுக்க முடியும் என்று ஆகிவிடும் என்பதனாலேயே. அவர் பதவி துறந்தால் நாட்டை விட்டு வெளியேற முடியாது போய்விடும். ஆகவே அவர் பதவியில் தொடர்ந்திருக்கவே பார்ப்பார். வெளியேற எத்தனிக்கமாட்டார்.

ஆனால் நாடாளுமன்றம் 20 ஆம் திருத்தச் சட்டத்தை நீக்கி விட்டால் அடிப்படை உரிமைகள் சட்டத்தின் கீழ் பொது மக்கள் அவருக்கு எதிராக வழக்குகள் பதிய முடியும்.

எனவே இன்று நாங்கள் 'கோட்டாபய போ' என்ற கோஷத்திற்கு மேலதிகமாக 'நாடாளுமன்றமே! நிறைவேற்றதிகார ஜனாதிபதிப் பதவியை உடனே நீக்கு' என்ற கோஷத்தையும் எழுப்ப வேண்டும். - என்றார்.

# உற்சாகத்துடன் ஈஸ்டர் பண்டிகையை கொண்டாடுவதற்கு வழி செய்துள்ளோம்

## வாழ்த்துச் செய்தியில் ஜனாதிபதி பெருமிதம்

நமது மதங்களால் நமக்குள் புகுத்தப்பட்ட ஆன்மீக ஒழுக்கம் கடந்த இரண்டு ஆண்டுகளில் தொற்றுநோயை நிர்வகிப்பதில் குறிப்பிடத்தக்க வகையில் பயனுள்ளதாக இருந்தது, இறுதியாக, எங்கள் சகோதர, சகோதரிகள் இந்த ஈஸ்டரை வழக்கமான பண்டிகை உற்சாகத்துடன் கொண்டாடக் கூடியவாறு நமது அரசாங்கம் செய்துள்ளது என ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ குறிப்பிட்டுள்ளார்.

இயேசு கிறிஸ்துவின் உயிர்ப்பின் தினமாகிய இன்றைய ஈஸ்டர் தினத்தை முன்னிட்டு மக்களுக்கு வழங்கிய வாழ்த்துச் செய்தியிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் குறிப்பிட்டவை வருமாறு:-

கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலைக் குறிக்கும் ஈஸ்டர், இலங்கையிலும் உலகெங்கிலும் உள்ள கிறிஸ்தவர்களால் கொண்டாடப்படும் மிகவும் புகழ்பெற்ற மத விருந்துகளில் ஒன்றாகும்.

ஈஸ்டர் என்பது இருளைக் கடந்து நம்பிக்கையைக் கொண்டுவரும் கிறிஸ்துவின் மாற்றும் சக்தியின் அறிவிப்பு. நம்பிக்கை மற்றும் இரட்சிப்பின் மூலம் இவ்வுலகில் இருள் மற்றும் அவநம்பிக்கையை நீக்குவதற்கு கிறிஸ்துவின் சிலுவை மரணம் மற்றும் அவரது உயிர்த்தெழுதல் பற்றிய செய்தியைப் பற்றி சிந்திக்க அனைவரையும் அழைக்கிறது.

நமது மதங்களால் நமக்குள் புகுத்தப்பட்ட ஆன்மீக ஒழுக்கம் கடந்த இரண்டு ஆண்டுகளில் தொற்றுநோயை நிர்வகிப்பதில் குறிப்பிடத்தக்க வகையில் பயனுள்ளதாக இருந்தது.

இறுதியாக, எங்கள் சகோதர, சகோதரிகள் இந்த ஈஸ்டரை வழக்கமான பண்டிகை உற்சாகத்துடன் கொண்டாட முடிகிறது என்பது எனது நம்பிக்கை.

எவ்வாறாயினும், மூன்று ஆண்டுகளுக்கு முன்பு நடந்த கொடூரமான ஈஸ்டர் ஞாயிறு தாக்குதலின் சோகமான அனுபவம் நம் மனதில் தொடர்ந்து எதிரொலிக்கிறது.

எனவே, ஈஸ்டர் ஞாயிறு தாக்குதலில் பாதிக்கப்பட்ட அனைவருக்கும் நீதியை உறுதி செய்வதிலும், அனைத்து பொறுப்புள்ள தரப்பினருக்கு எதிராகவும் உரிய மற்றும் முறையான விசாரணைகள் மூலம் சட்டத்தை அமுல்படுத்துவதற்கு எங்கள் அரசாங்கம் உறுதிபூண்டுள்ளது என்பதை நான் உறுதியளிக்கிறேன்.

அமைதி, தைரியம் மற்றும் நம்பிக்கை ஆகிய ஆன்மீகப் பரிசுகள் அனைவரின் வாழ்க்கையையும் வளப்படுத்தும் ஈஸ்டர் பண்டிகையை கொண்டாடும் அனைவருக்கும் மகிழ்ச்சியான மற்றும் ஆசீர்வதிக்கப்பட்ட ஈஸ்டர் வாழ்த்துக்கள். - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# யாழ். நகரில் இன்று தீப்பந்தப் போராட்டம்

ஜனநாயகத்திற்காக ஒன்றிணைந்த இளையோர்களின் ஏற்பாட்டில் இன்று ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணம் நகரில் தீப்பந்தப் போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ளதாக ஜனநாயக ஒன்றிணைந்த இளைஞர்கள் அமைப்பு அறிவித்துள்ளது.

இதேவேளை, இந்தப் போராட்டம் காலிமுகத்திடலில் ஜனாதிபதியையும் அரசாங்கத்தையும் பதவி விலகுமாறு கடந்த ஒன்பது நாள்களாக முன்னெடுக்கப்பட்டுவரும் போராட்டத்திற்கு ஆதரவாக மேற்கொள்ளப்படுகின்றது என ஜனநாயகஒன்றிணைந்தஇளைஞர்கள் அமைப்பு தெரிவித்துள்ளது.

யாழ்ப்பாண மாவட்டத்தில் உள்ள அனைத்து இளைஞர்களும் இந்தப் போராட்டத்தில் பங்குபற்றி காலிமுகத்திடலில் போராட்டத்தில் ஈடுபடுவோருக்கு தமது ஆதரவினை அளிக்க முன்வருமாறு அவர்கள் அழைப்பு விடுத்துள்ளனர்.

# நெடுங்கேணி கள்ளிக்காட்டில் விபத்தில் குடும்பஸ்தர் மரணம்

முல்லைத்தீவு – நெடுங்கேணி கள்ளிக்காட்டுப் பகுதியில் மோட்டார் சைக்கிள் விபத்தில் குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்துள்ளார். நெடுங்கேணி வீதியில் கள்ளிக்காடு எனப்படும் பகுதியில் வியாழனன்று இரவு மோட்டார் சைக்கிளில் பயணித்த 44 வயதுடைய – 6 ஆம் வட்டாரம் குமுழமுனையைச் சேர்ந்த – சுப்பிரமணியம் கோபிநாத் என்ற மூன்று பிள்ளைகளின் தந்தையே விபத்தில் உயிரிழந்துள்ளார் என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருபவை வருமாறு:-

புதுவருட தினமான வியாழனன்று இரவு 10.00 மணியளவில் இந்தக் குடும்பஸ்தர் தண்டுவானில் இருந்து முள்ளியவளை நோக்கி மோட்டார் சைக்கிளில் பயணித்துள்ளார்.

கள்ளிக்காட்டுப்பகுதியில் மோட்டார் சைக்கிள் வேகமாகச் சென்று பாலத்தில் மோதி, பின்னர் வயல் கம்பிக்கட்டையில் மோதியுள்ளது.

விபத்தில் பலத்த காயமடைந்த குடும்பஸ்தர் இரவு வேளை ஆள்கள் நடமாட்டம் குறைவான வீதியாக காணப்பட்டமையால் மீட்கப்படாமல் உயிரிழந்துள்ளார்.

விபத்து குறித்து முள்ளியவளை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். முல்லைத்தீவு மாவட்ட பதில் நீதிவான் த.கெங்காதரன் சம்பவ இடத்திற்கு வருகைதந்து பார்வையிட்டு விசாரணைகளை முன்னெடுத்தார். உடலம் பிரேத பரிசோதனைக்காக முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனைக்குக் கொண்டுசெல்லப்பட்டது. பிரேத பரிசோதனைகளின் பின்னர் உடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.